**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 79/2011 P.W. 3/L.W7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மீனாள் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 24.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். வழக்கில் முதல் தகவல் அறிக்கைப் பதிவுச் செய்த உதவி ஆய்வாளர் சாந்தி, ஆய்வாளர் சொரூப ராணி ஆகியோரின் கையெழுத்தும் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. இதற்கு முன்பு நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் சாந்தி என்பவர் 23.07.2010 ம் தேதி காலை 10.00 மணிக்கு Crl.M.P. No. 3925/2009, dated 26.10.2009 ன் படி கிடைத்த தபாலினை பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 18/2010 சட்டப்பிரிவுகள் 498 எ, 34 இ.த.ச 1860 மற்றும் 3, 4, 6D.P. Act ன் படி வழக்குப் பதிவுச் செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் சொரூபராணி அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்குக் கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் சொரூபராணி என்பவர் வழக்கின் வாதியை 23.07.2010 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை எனது விசாரணைக்காக ஒப்படைத்தார். நான் இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் வாதியை விசாரணைச் செய்தபோது அவர் முன்பு

புலன்விசாரணை அதிகாரியிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யவில்லை.

4. பின்னர் சாட்சிகள் செல்லம், செல்லம்மாள், மோகன், வினோ, மற்றும் வழக்குப் பதிவுச் செய்த உதவி ஆய்வாளர், சாந்தி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 2 முதல் 7 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரிய வந்ததால் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 30.08.2010 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. 20.08.2009 ம் தேதி புகார்தாரர் எங்கள் நிலையத்தில் கொடுத்த புகார் மனு, ரசீது எண் 224/2009, நாள் 21.08.2009 ம் தேதி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் அவர்கள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் தாங்கள் சமாதானமாக பேசி செல்வதின் அடிப்படையில் முடிக்கப்பட்டது.

2. இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 18.08.2009 அன்று எங்கள் நிலையத்தில் தன் மனைவியை சேர்த்து வைக்கவேண்டுமென்று புகார் மனு கொடுத்தாரா என்றால் அது குறித்த கோப்புகள் இந்த வழக்கு கோப்பில் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 18.08.2009 ம் தேதி எங்கள் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு 21.08.2009 அன்று தாமதமாக மனு எண் கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்த கோப்புகள் இந்த வழக்கு கோப்பில் இல்லை.

3. 28.10.2009 ம் தேதி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்பும் 23.07.2010 அன்று சுமார் 9 மாதங்கள் காலதாமதமாக தான் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்பட்டது என்று சொன்னால் - ஆம். புகார்தாரர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக ஜுவனாம்சம் கேட்டு எம்.சி. எண் 9/2009 ஆக இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது எனது விசாரணையில் துலங்கியதா என்றால் இல்லை. வழக்கு பதிவுச் செய்வதற்கு முன்பே குற்றம் சுமத்தப்பட்ட நபர் மாவட்ட நீதிமன்றத்தில் பிரிந்து வாழ்வதற்காக மனு தாக்கல் செய்து பின்னர் இருவரும் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் அவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த குறிப்பு மட்டும் தான் உள்ளது.

4. புகார்தாரர் புகார் மனுக் கொடுக்கும் காலம் வரை குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்பவீட்டில் முழுமையாக வசித்து வந்தாரா என்றால் இல்லை, தனியாக தான் வீடு எடுத்து தங்கி வந்தார். தனியாக பல இடங்களில் வீடு எடுத்து தங்கியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு கொடுப்பதற்கு முன்பு 15 நாட்களுக்கு முன்பு வரை சென்னை, ஆவடியில் தனியாக வீடு எடுத்து வசித்து வந்தது எனது விசாரணையில் துலங்கியதா என்றால் - ஆம். ஆனால் உறுதியாக நாட்கள் தெரியவில்லை.

5. ஆவடியில் வசித்து வந்ததாக சொல்லப்படும் வீட்டின் உரிமையாளர் பெயர் சரவணன் என்றால் அது குறித்த குறிப்புகள் எதுவும் இல்லை. புகார்தாரர் தான் சென்னையில் வசித்தபோதும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தகராறு செய்ததாக புகாரில் சொன்னதைப் பொறுத்து வீட்டின் உரிமையாளரை விசாரித்தேனா என்றால் இல்லை. குருந்தன்கோடு, கண்டன்விளை, ஆரல்வாய்மொழி ஆகிய பகுதிகளில் தரப்பினர்கள் தனியாக வீடு எடுத்து தங்கியுள்ளார்கள் என்றால்

சரிதான். மேற்படி பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர்களையோ, அல்லது அந்த வீட்டின் அருகில் உள்ள நபர்களையோ நான் வழக்கின் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவுச்செய்தேனா என்றால் இல்லை.

6. முதல் விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அது போல் மற்ற சாட்சிகள் யாரையும் நான் சொன்னது போல் விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை என்றால் சரியல்ல. வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவுச் செய்யவேண்டுமெனில் மாவட்ட சமூக நல அலுவலரிடமிருந்து அறிக்கை பெற்ற பின்பு தான் வழக்கு பதிவுச் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்றால் சரிதான். அது போல் இந்த வழக்கிலும் நான் மாவட்ட சமூக நல அலுவலருக்கு அறிக்கை கேட்டு, வேண்டுகோள் விடுத்தேன் என்றால் சரிதான். அந்த வேண்டுகோளின் படி இன்று வரை அதில் என்ன முடிவுச் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்த கோப்புகள் வழக்கு கோப்பில் இல்லை. மேற்படி ஆவணம் நீதிமன்ற கோப்பில் இருப்பதால் **குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு ஆவணமாக Ex. Dw1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. நான் முறையாக சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறான சங்கதிகளின் அடிப்படையில் தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.